கல்லறை மேனியர் கண் திறப்பார்களே கார்த்திகை நாளிலே
அவர் கண்திறந்து சின்ன புன்னகைத்து வந்து கைதொழுவார்களே
மேனியிலே
மன்னவரை பாடுதற்கு இந்த ஜென்மம் போதவில்லை
கல்லறையில் போடுதற்கு கோடி மலர் பூக்கவில்லை கோடி மலர்
பூக்கவில்லை கல்லறை மேனியர் கண் திறப்பார்களே கார்த்திகை நாளிலே
அவர் கண்திறந்து சின்ன புன்னகைத்து வந்து கைதொழுவார்களே
மேனியிலே

கோயில் மணி ஓசையிட தேகம் மெல்ல உயிர் பெறும்
ஆறு மணியானவுடன் வாசல் மெல்ல திறந்திடும்
கல்லறை தெய்வங்கள் கண்ணெதிரே வந்து என்னென்னவோ கதைப்பார்கள்
அந்த புன்னிய நேரத்தில் வண்ணங்கள் ஆயிரம் மின்னிடவே சிரிப்பார்கள்
இது குருதி ஓடும் நரம்பில் ஆடும் உணர்வின் ஆனுபவம்
யாரும் வெளியில் நின்று அறிய முடியா புதிய தரிசனம்

காற்றெழுந்து வீசிடவே கண்ணெதிரே வந்தெழுவார்
காத்திருப்போர் காதுகளில் வார்த்தை ஒன்று பேசிடுவார்
தீபங்கள் ஏற்றிடும் தோழர்களை பார்த்து தாகத்துக்கும் பதில் கேட்பார்கள்
வண்ண பூவுடனே வரும் தோழியரை பார்த்து தேசத்துக்கும் வழி
கேட்ப்பார்கள்
இது குருதி ஓடும் நரம்பில் ஆடும் உணர்வின் ஆனுபவம்
யாரும் வெளியில் நின்று அறிய முடியா புதிய தரிசனம்